## 6.3 சமத்துவபுரம் குடியிருப்பு அமைத்தல்–தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவரை சிறப்பு அதிகாரியாக நியமித்தல்

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (ப) எண். 99 நாள் : 12.06.1998

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.171, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22.10.1997
2. அரசாணை (நிலை) எண்.43 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 18.05.1998

**ஆணை**

1. இந்திய திருநாட்டின் பொன்விழா ஆண்டில், சாதி மத பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை அமைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு முதற்கட்டமாக 29 மாவட்டங்களிலும் சமத்துவபுரங்களை அமைக்க ஒரு மிக முக்கியமான திட்டத்தை அறிவித்தது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் தங்களது மாவட்டத்தில் குறைந்தது ஒரு சமத்துவபுரத்தையாவது அமைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டனர். மாநிலத்தில் 50 சமத்துவபுரங்களுக்கு மேற்படாது அமையும் வண்ணம் சில மாவட்டங்களில் இரண்டு அல்லது மூன்று சமத்துவபுரங்களை அமைக்கவும் அனுமதிக்கப்பட்டது.

2. ஒவ்வொரு சமத்துவபுரமும், 5 செண்ட் நிலத்தில் ஒரு வீடாக 100 குடியிருப்புகளைக் கொண்டதாக அமைய வேண்டுமென அரசு அறிவுறுத்தியுள்ளது. இந்த 100 குடியிருப்புகளில் 40 ஆதி திராவிடர்களுக்கும், 25 மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், 25 பிற்படுத்தப்பட்டோருக்கும், 10 பிற சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒதுக்கப்படும். அவ்வாறு ஒதுக்கப்படும் குடியிருப்புகள், ஒரு சாதியைச் சார்ந்தவருக்கும் ஒதுக்காது, அனைத்து சாதியைச் சார்ந்தவர்களுக்கும் அண்டை வீட்டுகாரர்களாக நல்லிணக்கத்துடன் வாழும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறிப்பாக அறிவுறுத்தப்பட்டனர்.

3. ஒவ்வொரு சமத்துவபுரம் அமைக்கப்படுவதற்கான செலவினங்கள் முழுமையாக அரசால் ஏற்கப்படும். மேலும், சாலைகள், தெரு விளக்குகள், கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் குடிநீர் வசதி போன்றவற்றை நிர்மானிக்கத் தேவையான முதலீடு, அரசின் பல்வேறு திட்ட ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படும் நிதியிலிருந்து செலவிடப்படும். சமத்துவபுரத்தில் அமைக்கப்படும் ஒவ்வொரு குடியிருப்பிற்கும் ரூ.35,000/– வீதம் அரசு மானியமாக வழங்கும். தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலத்தில் பெரிய வீடாகக் கட்டிக் கொள்ள விரும்பும் பயனாளிகள், அதிகப்படியாக ஆகும் செலவினத்தைச் சரிகட்ட தங்களிடமுள்ள நிதி ஆதாரத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது ஊரக கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் பெறலாம்.

4. 15.08.97 முதல் 15.08.98 முடிய உள்ள ஓராண்டு காலத்தில், 50 இடங்களில் சமத்துவபுரங்களை அமைத்து, பயனாளிகளுக்கு வீடுகளை ஒதுக்க வேண்டுமென மாவட்டாட்சியர்களை அரசு அறிவுறுத்தியிருந்தது. இதற்காக மாவட்டாட்சியர்கள் ஒருங்கிணைப்பாளர்களாக அறிவிக்கப்பட்டிருந்தனர். 06.06.98 அன்று நடந்த மாவட்டாட்சியர்கள் மாநாட்டில் சமத்துவபுரங்கள் அமைப்பது பற்றி ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இதுவரை நடந்துள்ள பணிகளின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த ஆய்வின் போது பல்வேறு மாவட்டங்களில் சமத்துவபுரம் அமைக்கும் பணி மிகவும் மந்தமாக நடந்து வருவதாக அறியப்பட்டது. இது தொடர்பாக மாவட்டாட்சியர்கள், சமத்துவபுரம் அமைக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனவும், சமத்துவபுரம் அமைக்கும் பணிகள் அரசு ஏற்கனவே குறிப்பிட்டுள்ள காலகட்டத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை மாவட்டாட்சியர்கள் தங்களது முதன்மையான பொறுப்பு என உணர்ந்து செயல்பட வேண்டுமெனவும் அரசு விரும்புகிறது.

5. மேலும் சமத்துவபுரம் அமைக்கும் பணிகளைத் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மேற்பார்வையிட்டு, பணிளை விரைவுப்படுத்துவதற்காக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவராக உள்ள திரு ஏ.நாகராசன், இ.ஆ.ப., அவர்களைச் சிறப்பு அதிகாரியாக அரசு நியமித்து ஆணையிடுகிறது.

6. திரு. நாகராசன், இ.ஆ.ப., தனது அலுவலகப் பணிகளுக்கு இடையூறின்றி சமத்துவபுரம் அமைக்கும் பணிகளை மிகவும் கூர்ந்து மேலாய்வு செய்து, சமத்துவபுரம் குடியிருப்புகள் அமைக்கத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துதல்

6. SAMATHUVAPURAM

மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்தல் போன்ற பணிகளையும் ஆய்வு செய்து, குடியிருப்புகளைக் கட்டி முடிக்கும் பணிகளை விரைவுபடுத்தி, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள், வீடுகள் கட்டி முடிக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

7. மாவட்டாட்சியர்களுடன் கூட்டாய்வு செய்வதற்காக தேவைப்படும் அளவில் மூன்று அல்லது நான்கு மாவட்டாட்சியர்களுக்கு மிகாமல் ஏதாவதொரு மாவட்டத்தில் அவர்களை அழைத்து ஆய்வு நடத்தவும் திரு. ஏ.நாகராசன், இ.ஆ.ப., அவர்களுக்கு இசைவு அளிக்கப்படுகிறது.

8. இது தொடர்பாக திரு. ஏ.நாகராசன், இ.ஆ.ப., அவர்கள் இரு வார முன்னேற்ற அறிக்கையினை தலைமைச் செயலருக்கு நேரடியாக அனுப்பி வைக்கவேண்டுமெனவும் அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அ. நம்பியார்**
தலைமை செயலர்